# பகவான் விஷ்ணுவின் முடிவு

## சாந்திப்பிரியா



ஒரு முறை மகரிஷி நாரதர் பகவான் விஷ்ணுவைப் பார்க்க வைகுண்டத்திற்கு சென்று கொண்டு இருந்தார். வழி நிறைய காடுகள். அவற்றின் வழியாக சென்று கொண்டு இருந்த பொழுது வழியில் ஒரு இடத்தில் ஒரு முனிவர் தவத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்டார். அவர் மீது கறையான் புற்று கூடு கட்டி இருப்பதுக் கூடத் தெரியாமல் தவத்தில் இருந்தார். அங்கு என்னதான் நடக்க இருக்கின்றது என்று பார்க்க எண்ணிய மகரிஷி நாரதர் அங்கே சில நாட்கள் தங்கினார். சில நாட்கள் பொறுத்து அந்த முனிவர் கண் விழித்தெழுந்து கறையான் புற்றை சட்டையை கயற்றி போடுவது போல விலக்கி விட்டு வெளியில் வந்தார்.கண்விழித்து எழுந்தவர் மகரிஷி நாரதரிடம் தமது வணக்கங்களை தெரிவித்த பின்னர் அவர் எங்கு போக

இருக்கின்றார் எனக் கேட்க மகரிஷி நாரதரும் தான் போக இருந்த இடத்தைப் பற்றிக் கூறினார். உடனே அந்த முனிவர் மகரிஷி நாரதரிடம் மிகவும் மகிழ்ச்சி அடைந்து தனக்கு மோட்ஷம் கிடைக்க இன்னும் எத்தனை பிறவிகள் உள்ளன என பகவான் விஷ்ணுவிடம் கேட்டறிந்து விட்டு வருமாறு வேண்டிக் கொண்டார். சரி என்று கிளம்பிப் போனார் மகரிஷி நாரதர். அதே அடர்ந்த காட்டின் வழியாகச் செல்லுகையில் இன்னொரு இடத்தில் மற்றொரு முனிவர் ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் இருந்ததைக் கண்டார். அவர் ஆடலிலும் பாடலிலும் பகவான் நாமம் மட்டும் ஒலித்துக் கொண்டே இருந்தது. அவர் ஆடலையும் பாடலையும் நிறுத்திவிட்டு மகரிஷி நாரதரிடம் தமது வணக்கங்களை தெரிவித்த பின்னர் அவர் எங்கு போக இருக்கின்றார் எனக் கேட்க மகரிஷி நாரதரும் தான் போக இருந்த இடத்தைப் பற்றிக் கூறினார். உடனே அந்த முனிவரும் மகரிஷி நாரதரிடம் மிகவும் மகிழ்ச்சி அடைந்து தனக்கு இன்னும் எத்தனை பிறவிகள் உள்ளன என பகவான் விஷ்ணுவிடம் கேட்டறிந்து விட்டு வருமாறு வேண்டிக் கொண்டார்.

மகரிஷி நாரதரும் பகவான் விஷ்ணுவிடம் சென்று அந்த இரண்டு முனிவர்களும் கேட்ட கேள்வியைக் கேட்க பகவான் விஷ்ணுவும் முதல் முனிவருக்கு மோட்சத்தை அடைய இன்னும் பல பிறவிகள் வேண்டும் எனவும் ஆனால் இரண்டாம் முனிவருக்கும் சில பிறவிகள்தான் உள்ளது என்றாலும் ஒவ்ஒரு முறையும் அவர் மோட்சத்தையே அடைந்து மறு பிறவி எடுப்பார் எனவும் கூறி அனுப்பினார்.

மகரிஷி நாரதர் அந்த இரண்டு முனிவர்களிடமும் சென்று பகவான் விஷ்ணு கூறிய பதிலைக் கூற முதல் முனிவர் ஆத்திரப்பட்டார். 'என்ன எனக்கு இன்னும் பல பிறவிகளா? நான் இத்தனை நாட்களும் செய்த தவத்தின் பலன் அதுதானா' என கோபமாக கேட்டார் . அடுத்த முனிவரோ அந்த பதிலைக் கேட்டு துள்ளிக் குதித்து ஆனந்தக் கூத்தாடினார். 'ஆகா.. நான் எத்தனை பாக்கியம் செய்து உள்ளேன். இன்னும் பல பிறவிகளிலும் என்னால் பகவான் நாமத்தை உச்சரித்தபடி மகிழ்ச்சியோடு இருக்க முடியும் என்பதை

நினைத்து ஆனந்தப்படுகின்றேன்' என்றார். அவர்கள் பதிலைக் கேட்ட மகரிஷி நாரதர் ஆச்சரியம் அடைந்தார்.

மீண்டும் பகவான் விஷ்ணுவிடம் சென்று அவர்களுடைய பதிலைக் கூறி அவரிடம் அதற்கான விளக்கம் கேட்க பகவான் விஷ்ணு கூறினார் ' தன்னை மறந்து பகவான் நாமத்தை உச்சரித்தபடியே இருந்த இரண்டாவது முனிவர்தான் உண்மையில் பாக்கியசாலி. அவர் எத்தனை பிறவி எடுத்தாலும் பகவானையே நினைக்கின்றார். அதனால்தான் அவர் பகவானுடனேயே வந்து தங்கட்டும் என்பதற்காக சில பிறவிகள் மட்டும் தந்தேன். தனக்கு மோட்சம் வேண்டும் என தன்னை மட்டுமே மனதில் பிரதானமாக வைத்துக் கொண்டு தவம் இருந்தவர் முதல் முனிவருக்கும் கடவுள் சிந்தனை இருந்தது என்றாலும் கடவுள் சிந்தனையை விட தன்னுடைய சிந்தனை மட்டுமே அதிகம் இருந்தது . அதனால்தான் அவர் மனம் இன்னும் பக்குவம் அடைய வேண்டும் என்பதினால் மேலும் பல பிறவி எடுக்க வேண்டும் என முடிவு செய்தேன்' என்றார்.

# Decision of Lord Vishnu

## Santhipriya



Once Maharishi Narada was going to Vaikuntha to meet Lord Vishnu. On way to Vaikund, he had to cross many forests. While passing through one of the forests, he saw a sage in meditation. He was meditating without even knowing that an anthill had raised covering him. Maharishi Narada stayed there for some more days to watch what the sage was going to do ultimately. After few days the sage woke up and came out of the anthill like removing the shirt worn by him. When the meditating sage woke up and saw Maharishi Narada, he offered his obedience and then enquired where he was going. When Maharishi Narad told him that he was on way to meet Lord Vishnu, the sage requested the Maharishi

to find out from Lord Vishnu how many more births he had before reaching heaven to get no birth status. Maharishi Narada agreed to enquire and come back. As Maharishi Narada further proceeded, in another place he saw yet another sage dancing and singing with hymns on Lord Vishnu. On seeing Maharishi Narada, the sage stopped dancing, offered obedience and then enquired where he was proceeding. When Maharishi Narada told him of his mission, the sage requested the Maharishi to find out from Lord Vishnu how many more births he had before getting no birth status.

Maharishi Narada reached Vaikund, met Lord Vishnu, offered his obedience and then posed the questions of the sages. Lord Vishnu replied that the first sage whom he met has many more births before reaching the status of no birth, while the second sage though had some more births, every time he died, he would go to heaven and then take re birth.

When Maharishi Narada went back conveyed the message of Lord Vishnu to the sages, the first sage was enraged and expressed displeasure saying what use his meditation on the Lord has earned for him, while the second sage jumped in joy stating that he was delighted to get few more births which would give him opportunity to chant and sing the name of the Lord and began to again dance in ecstasy with hymns on Lord.

Surprised Maharishi Narada again went to Lord Vishnu and sought his views on their reaction. Lord Vishnu clarified that 'Blessed is the second sage who utter the name of Lord while singing and dancing unmindful of what would happen

to him. His mind was filled only with the thoughts on God. That is why I gave him only few births. On the other hand, the first sage who repented the status of many births, was meditating with the selfish aim of getting birth in heaven and his mind was not filled with the thoughts of the Lord. Hence in order to get more maturity of mind I gave him lots of birth.